# அகம் 5 புறம் 5

*புதுமைப் பயணம்*

## அகம் 4

## (நேர்மை)

NIKHIL FOUNDATION
(Empowering Youth Towards Excellence)

## *நேர்மை*

டிரான்பரன்ஸி இன்டர்நேஷனல் நமது நாட்டை நேர்மை என்ற அளவுகோலைப் பொறுத்தளவில் 175 நாடுகளில் 85ஆவது ரேங்கில் வைத்துள்ளது. நமது பக்கத்திலுள்ள சிங்கப்பூரோ 9ஆவது இடத்தில் உள்ளது. ஊழல் விஷயத்தில் நம்மைத் தலைகுனியவைக்கும் புள்ளிவிபரம் இது. நாமும் அந்த 9 ஆவது இடத்தையாவது அல்ல அல்ல முதலாம் இடத்தைப் பிடிக்க என்ன செய்யலாம். அதற்கான முயற்சிதான் இது.

நேர்மை, நீதி, நியாயம் என்று பேசுபவர்களை இளிச்சவாயன், ஏமாளி என்றழைக்கும் சமுதாயத்தில் நேர்மைக்கு வேலை உள்ளதா? வேண்டிய காரியம் கிட்ட கடவுளுக்கே லஞ்சம் தரத் தயாராக உள்ள ஒரு சமுதாயம்; கடவுள் என்ன? கடவுள் போன்ற என் மேலதிகாரியையும் நான் சந்தோஷப்படுத்த வேண்டுமே நான் என்ன செய்வது. கடவுளுக்குப் பயன்படுத்தும் அதே உத்தி தான். கடவுள் போன்ற மேலதிகாரியும் சந்தோஷப்படுமாறு பொருள், பணம் எனக் கொடுத்து வேண்டியன சாதிப்பது. விளைவு; கட்டிய பாலங்கள், சாலைகள் சீரில்லாமல் இருப்பது, மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பலன்கள் சரிவரச் செல்லாத ஒரு நிலை, ஒரு நாள் வேலைக்கு ரூபாய் 100 என்றால் 80 பெற்றுக்கொண்டு திருப்தி அடையும் குடிமக்கள். தேர்தலில் நிற்கும் வேட்பாளரிடம் குற்றமில்லாமல் உரிமையாகப் பணம் பெறும் வெகுஜனம்.

ஊழல் செய்யும் மனிதர்களைக் கண்டிக்கத் தயாராக இல்லாத; ரௌத்திரம் பழகு என்று பாரதி சொல்லிச் சென்றபிறகும் கோபம் சிறிதும் படாத சமூகம்; ஊழல் செய்தவர்களைக் கொண்டாடுவதும் அவர்கள் சட்டப்படித் தண்டிக்கப்பட்ட பிறகு அவர்களைப் பற்றி மோசமாகப் பேசுவதும் இந்த சமூகத்தின் குணாதிசயம் அல்லவா? எண்ணுவது ஒன்று, சொல்வது மற்றொன்று, மேலும் செய்வது வேறொன்று என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் நடந்து கொள்ளும் அரசியல்வாதிகள் என்று இதற்கெல்லாம் காரணம் ஊழல் பெருச்சாளிகள் அல்ல, எண்ணம், சொல், செயல் என்று எதிலும் மாற்றமில்லாமல் வாழும் நல்லவர்களின் கையாலாகாத்தனம் தான். குற்றம் கண்டு ரௌத்திரம் கொள்ளத் தயாராக இல்லாத வெகுஜனம். இதற்கெல்லாம் காரணம் யார்? நமது கல்விமுறை, நமது கலாச்சாரம், நமது சரித்திரம்.

**நேர்மையும் சரித்திரமும்:**

காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்களால் அடிமைப்பட்டவர்கள் நாம். பிளாஸி போரில் ஒட்டுமொத்த வங்காளத்தையும் ஒரு 3000ரூபாய்ப் பணத்துக்காக கிளைவ் லாயிடின் கையில் தூக்கிக்கொடுத்த மிர் ஜாபர் வாழ்ந்த நாடு இது. 1687ல் கோல்கொண்டா கோட்டை வீழ்ந்தது துரோகத்தின் சரித்திரம் தான். பணம் வாங்கிக்கொண்டு கோட்டையின் பின்புறம் இருந்த இரகசியக் கதவைப் பணம் வாங்கிக்கொண்டு திறந்து விட்ட ஒருவன். லஞ்சம், ஊழல் என்ற ஆயுதத்தால் தான் மொகலாயர்கள் இராசபுத்திரர்களையும், மராத்தியர்களையும் தோற்கடித்தார்கள். செய் அல்லது செத்துமடி என்பதுபோல கடைசி வரை போராடும் குணம் நமக்கிருந்தது இல்லை. பணத்திற்கு விலைபோன மந்திரிகள், தளபதிகள் என நேர்மையற்றவர்களின் பட்டியல் பெரிசு. வாரன் ஹேஸ்டிங்ஸின் ஊழலுக்கான தண்டனை என்ன கிடைத்தது. ஊழல் என்பது கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்பாடுகளில் புரையோடிப்போன ஒன்று. ஆக வெள்ளைக்காரர்களிடமும் நாம் கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாரம்பரியம் ஊழல் செய்வதுதான். இப்படிப்பட்ட சரித்திரத்தை மாற்றப் பிறந்தவர்கள் தான் மாணவர்கள். வாருங்கள் சரித்திரத்தை மாற்றி அமைப்போம்.

**உண்மை சம்பவங்கள் நெட்டில் சுட்டது:**

இது நடந்தது குர்கானில். தெருவோரமாக பூட்டு ரிப்பேர் சரிசெய்யும் ஒரு சர்தார்ஜியிடம் தனது பூட்டைச் சரிசெய்யச் சென்ற சுமித்த கபூர் என்பவரின் அனுபவம் இது. அவர் பார்க்கும் பொழுது மோட்டார் பைக்கில் வந்த இருவர் மாமாஜி இந்தச் சாவிக்கு டூப்ளிகேட்சாவி செய்து தரமுடியமா என்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு அந்த சர்தார்ஜியோ பூட்டு இருக்கும் இடத்திற்குக் கூட்டிச் செல்லுங்கள் சாவி செய்து தருகிறேன். இப்படிச் செய்து தரமுடியாது என்று மறுத்துவிட்டாராம். ஒரு நாளைக்கு ரூபாய் 400 லிருந்து 500ரூபாய் மட்டுமே சம்பாதிக்கும் அந்த சர்தார்ஜி தன் தொழிலுக்கு காட்டிய நேர்மை, திருடர்களுக்கு உதவிடமுடியாது என்று கூறும் தைரியம். இன்னும் இப்படிப்பட்ட மனிதர்கள் இருப்பதால் தான் நாட்டில் மழை தவறாமல் பெய்கின்றது என்று கூறுகின்றனர்.

நான்கு கண்டங்களில் 16 நகரங்களின் நடத்தப்பட்ட சோதனை. கிட்டத்தட்ட ரூபாய் 3000 அளவு பணம், ஒரு போன் நம்பர் என்று பர்ஸ்களைக் கீழேபோட்டு என்ன செய்கின்றார்கள் என்று சோதித்தார்கள். 12 பர்ஸ்களில் 9 பர்ஸ்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்த மும்பாய் வாசிகள் என்று உலகளவில் நேர்மையில் 2வது ரேங்க் வந்த மும்பை நகரம் நமது காலரைத் தூக்கிவிட வைக்கின்றது.

மைசூரின் திவானாக இருந்த விஸ்வேஸ்வரைய்யா ஒரு சமயம் அரசு விருந்தினர் விடுதியில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பைல் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த வேலை முடிந்ததுடன் அந்த மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு கையிலிருந்த மற்றொரு மெழுகுவர்த்தியைப் பொருத்தி தனது வேலையைத் தொடர்ந்திருக்கின்றார். அதைப்பார்த்த அங்கிருந்த வேலையாள், முதல் மெழுகுவர்த்தி முழுவதும் கரையாத பொழுது அதை அணைத்து விட்டு வேறு மெழுகுவர்த்தியை எதற்குப் பொருத்தினீர்கள் என்று கேட்டான். அதற்கு அவரோ நான் முதலில் பொருத்தியிருந்தது ஆபிஸ் மெழுகுவர்த்தி. ஆபிஸ் வேலை முடிந்தவுடன் அணைத்து விட்டேன் இரண்டாவது நான் செய்த வேலை சொந்த வேலை. ஆகையால் எனது சொந்த மெழுகுவர்த்தியைப் பொருத்திச் செய்தேன். நேர்மைக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேண்டுமா?

**கிரியும் நேர்மையும்:**

கிரியும் அவனது தம்பியும் பாசமாக வாழ்ந்து வந்தார்கள். கிரிக்கு தன் தம்பி மீது மிகவும் பாசம். தாய் தந்தை இல்லாததால் தனது தம்பியை மிகவும் பாசமாக வளர்த்து வந்தான். தீபாவளி நெருங்கி வந்தது. ஆனால் வேலையேதுமில்லாததால் வேலை தேடிச்சென்றான். ஒரு பாக்டரி மேனேஜரைப் பார்த்து மிகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டான். அவரும் தற்சமயம் வேலையேதுமில்லை என்றும் ஒரு மாதம் கழித்து வரும்படியும் கூறினார். இரண்டு நாட்களில் தீபாவளி. என்ன செய்வதென்று தெரியவில்லை. சோகத்துடன் திரும்ப எத்தனிக்கும் பொழுது ஒரு பர்ஸ் விழுந்து கிடந்ததைப் பார்த்தான். அதில் ரூபாய் 3000

பணம் இருந்தது. அந்த பணத்தில் தீபாவளியை தம்பி எதிர்பார்த்த மாதிரிக் கொண்டாடிவிடலாம். ஆனால் அது மற்றவருடைய பர்ஸ். உரியவரிடம் ஒப்படைப்பதே முறை என எண்ணி அந்தப் பர்ஸில் மேலும் தேடினான். அதில் அந்த மேனேஜரின் போட்டாவும் இருந்தது. உடனே பர்ஸை எடுத்துச் சென்று அந்த மேனேஜரிடம் கொடுத்தான். மேனேஜரும் இப்படி நியாயமான ஆட்களைப் பார்ப்பதே கடினம் என்றுணர்ந்து அவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து ரூபாய் 100 பரிசாகக் கொடுத்தார். கிரியும் தம்பியுடன் சென்று தீபாவளியை நல்ல முறையில் கொண்டாடினான்.

மேலே கூறப்பட்டுள்ள கதை பற்றி உங்கள் கருத்து(பின்வரும் மூன்று விடைகளில் உங்களுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுவதைத் தேர்ந்தெடுக்கவும்)

7. நேர்மை என்பது ஒருமனிதனின் மிகப் பெரிய சொத்து
8. நமது நேர்மை நெடியதோர்வாழ்க்கையில் நமக்கு நல்ல பலன் தரும்.
9. கிரியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு தான் அந்த 100 ரூபாய்

**கதையிலிருந்து அனுபவப்பாடம்**

7. இது மாதிரியான உங்களது சொந்த அனுபவத்தைப் பகிரவும்.
8. உங்களுக்கு தெரிந்த ஒருவரின் இதுபோன்ற அனுபவத்தைப் பற்றிப் பகிரவும்.
9. நீங்கள் நேர்மையாக நடந்து மற்றவர்கள் அதுபோல் உங்களிடம் நடக்காவிட்டால் எப்படி உணர்வீர்கள்

**கதையிலிருந்து நாம் தெரிவது**

10. நான் நேர்மையை எந்த அளவு மதிக்கிறேன்?
11. நேர்மையின் இயல்பு என்ன?
12. எனது நேர்மையற்ற தன்மையை எப்படிக் கையாள்வேன்.

ஆக நேர்மை பற்றியும் அதன் நீண்டகால பலன் பற்றியும் அதன் சிறப்பியல்பைப் பற்றியும் தெளிந்தோமா?

**அடுத்ததாக மாணவர்கள் தமக்குள் சொல்லிப்பார்க்கவேண்டியது**

22. நான் நேர்மையாக இருக்கும் பொழுது என்னுள் தெளிவாக உணர்கிறேன்
23. நான் நேர்மையாக இருக்கும் பொழுது எனது மூச்சு சீராக இருக்கின்றது
24. எனது நம்பகத்தன்மை எனது உண்மையான மற்றும் நேர்மையான செயல்பாடுகளைப் பொறுத்தது.
25. நேர்மையான எண்ணங்களும், வார்த்தைகளும், செயல்களும் ஒரு லயத்தை உருவாக்குகின்றன.
26. நேர்மைக்கும் நம்பகத்தன்மைக்கும் ஓர் ஆழ்ந்த உறவு இருக்கின்றது.
27. தைரியத்திற்கும் உண்மைக்கும் ஓர் ஆழ்ந்த உறவு இருக்கின்றது
28. நேர்மை என்பது நல்லதோர் பண்புநலன்
29. நான் நேர்மையாக இருக்கும் பொழுது மற்றவர்க்கும் உதவியாக இருக்க முடியும்.
30. நேர்மையின்மை என்ற ஆணிவேரிலிருந்து தான் பேராசை பிறக்கின்றது.
31. மனிதர்களின் தேவைகளுக்கு இந்த பூமியில் அனைத்தும் இருக்கின்றது ஆனால் ஆசைகளுக்கல்ல.
32. சேர்ந்து வாழும் பொழுது உண்மையின் முக்கியத்துவத்தை உணர்கிறேன்

**நேர்மையும் மாணவப்பருவமும்:**

ராமசாமி தனது திருத்திய தேர்வுத்தாளுடன் ஆசிரியருக்கருகில் நின்று கொண்டிருந்தான். எதற்காக அவன் நின்றுகொண்டிருந்தான் என்று ஊகிக்க முடிகின்றதா? இன்னும் கூடுதல் மதிப்பெண்கள் வேண்டும் என நின்றுகொண்டிருப்பான் என்றுதானே தோன்றுகின்றது. உண்மையில் ஆசிரியர் தவறாக அவனுக்குக்கூடுதலாக மதிப்பெண்கள் போட்டிருந்தார். அதை அவரிடம் சொல்லிக்குறைப்பதற்காகத் தான் அவன் நின்றுகொண்டிருந்தான். என்ன அருமையான மாணவன் அவன். தேர்வு நடக்கும் பொழுதே அவனுக்கு ஒரு கேள்விக்கு விடை தெரியவில்லை. பக்கத்திலிருந்த மாணவனோ அவனுக்கு விடையைக் காண்பிக்கத் தயாராக இருந்தான். ராமசாமியோ பார்த்து எழுத 5 நிமிடம் கூட ஆகாது. ஆனால் அப்படி எழுதப்பட்ட விடை மனதில் பதிவதற்கு வாய்ப்பில்லை. மதிப்பெண் குறைந்தாலும் பரவாயில்லை. நான் என் அறிவை மேம்படுத்த படித்தே அடுத்த தடவை தேர்வு எழுதிக் கொள்கிறேன் என்றான். பார்த்து எழுதும் பொழுது நமக்கு மூச்சு ஒரு சீராக இருக்காது. உடம்பெல்லாம் நம்மையறியாது ஒரு பதட்டம் ஏற்படும். நமது ரத்தஓட்டத்தில் நச்சு அதிகம் கலந்துவிடும் என்பர். நமக்கு நாம் உண்மையாக இருக்கும் பொழுது நமது மூச்சு ஒருலயத்துடன் கண்டிப்பாக இருக்கும். எனக்கெல்லாம் பார்த்து எழுதும் பொழுது சீராக மூச்சு விடுவதில் எந்தப் பிரச்சனையுமில்லையே என்று கிருஷ்ணன் கூறுகிறான். அது சரியா? தூய்மையான வெள்ளைச் சட்டை அணியும் பொழுது அதில் எந்த அழுக்கும் படியாமல் எவ்வளவு பத்திரமாக இருக்க முயற்சி செய்கிறேன். அதேசமயம் ஒரு கறை பட்டுவிட்டால் கூட அதற்குப் பிறகு அந்த வெள்ளைச் சட்டை எவ்வளவு அழுக்கானாலும் நாம் கவலைப்படுவதில்லை. எந்த விதக்குறுகுறுப்பும் இல்லாமல் தவறு செய்பவர்கள் இந்த வகையைச் சார்ந்தவர்கள் தான்.ஆக நேர்மையா வாழ்ந்து விட்டால் நல்லது. ஒரு பொய் சொன்னால் அதை மறைக்க ஓராயிரம் பொய்சொல்ல வேண்டிவரும் என்பர். ஆக உண்மையாகவும், நேர்மையாகவும் இருப்பது நமக்கு நலம் பயக்கும்.

**உதாரண புருஷர்கள்:**

**காமராசர் என்ற புனிதர்:**

காமராசர் அவர்கள் முதன்மந்திரி ஆனபிறகும் அவர் தாயார் பொதுக் குழாயிலிருந்து தான் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார். ஆர்வக்கோளாறில் நகராட்சி அதிகாரிகள் காமராசர் அவர்கள் வீட்டிற்குள்ளேயே ஒரு தண்ணீர் பைப் போட்டுக் கொடுத்தனர். இது அறிந்த காமராசர் அவர்கள் இதைத் தடுத்துவிட்டார். முதன்மந்திரியின் உறவினர்கள் என்பதால் சிறப்புச் சலுகை ஏதும் தரக்கூடாது என்று உத்தரவு போட்டார். இந்தியாவின் பிரதம மந்திரிகளையே தீர்மானித்த அவர் இறந்த பொழுது அவரிடம் இருந்த மொத்தப் பணம் ரூபாய் 156 தான். இன்றைய அரசியல்வாதிகளோடு ஏன் ஒரு சாதாரண கவுன்சிலருடன் கூட ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. நேர்மை மற்றும் எளிமையின் மொத்த உருவம் தான் காமராசர் அவர்கள். அவரது தாயார் மறைந்த பொழுது அவருக்கு மொட்டை அடித்த நாவிதனுக்குப் பணம்கொடுப்பதற்காக பைக்குள் கைவிடுகிறார் ரூபாய் ஒன்று தான் அவர் கையில் வருகின்றது. உடனே அங்கிருந்த ஒருவர் தன்னிடமிருந்த 10 ரூபாயைக் கொடுத்தார். ஆனால் அந்த நாவிதனோ, அந்தப் பணத்தை வாங்க மறுத்து சத்தியவான் கைப் பணம் ஒரு ரூபாயாக இருந்தால் கூடப் போதும் என்று காமராசர் அவர்களிடமிருந்த அந்த ஒரு ரூபாயை வாங்கிப்பெற்றுக்கொண்டான். தனக்கென வாழாமல் பிறருக்காக அவர் வாழ்ந்ததால் தான் பள்ளிக்குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவர முடிந்தது. தமிழகத்தில் இன்றிருக்கும் பல அணைகள்..மேல் பவானி, கீழ் பவானி, மணிமுத்தாறு, வைகை, அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புல்லம்பாடி, பரம்பிக்குளம் போன்றன அவர் முயற்சியால் வந்தவை தான். நெய்வேலி நிலக்கரி நிறுவனம். பாரத கனரக தொழிற்சாலை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் என்று அவரால் தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டவைகள் ஏராளம். நேர்மையாக வாழ்ந்ததால் தான் குறுகிய சுயநல நோக்கில்லாமல் ஒரு தொலைநோக்குடன் அவரால் பணியாற்றமுடிந்தது. ஒரு விவசாயியிடம் மண்ணினால் கட்டப்பட்ட மணிமுத்தாறு அணை எப்படி நிற்கின்றது என்று கேட்ட பொழுது நீதிமான் கட்டிய அணை அதனால் நிற்கின்றது என்றாராம்.

**மாணிக் சர்க்கார்:**

இந்தியாவிலுள்ள திரிபுரா மாநிலத்தின் மிக ஏழ்மையான நேர்மையான முதன்மந்திரி. நான்காவது முறையாக முதன்மந்திரியாகப் பதவி வகிக்கிறார். தனது சம்பாத்தியம் முழுவதையும் தான் சார்ந்த கட்சிக்காகக் கொடுத்துவிடுகிறார். இவரது வாழ்க்கைத் தேவைகளுக்காக இவருக்குக் கட்சி மாதம் ரூபாய் 5000 வழங்குகின்றது. இவரது வங்கியிருப்பு வெறும் ரூபாய் 6500. இவரது மனைவி இவரது அலுவலகக் காரைப்பயன்படுத்த மாட்டார். அகர்தலா நகரத்தில் சைக்கிள் ரிக்ஷாவில் இவர் செல்வதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். இவரது விரோதிகள் கூட இவரது நேர்மையைச் சந்தேகிக்க மாட்டார்கள். இவரது தலைமையில் திரிபுரா மாநிலம் முழுவதும் படித்தவர்கள் இருக்கும் மாநிலமாக மாறப்போகின்றது. கணிணித்துறையில் நல்லதோர் வளர்ச்சியை மாநிலம் கண்டுள்ளது.

**பச்சைத் தண்ணீர் பத்மநாபன்:**

ஒருசமயம் பொதுப்பணித்துறையில் பத்மநாபன் என்ற ஒருவர் வேலைபார்த்து வந்தார். நீதிக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். ஊழல் புரையோடிப்போன பொதுப்பணித்துறையில் பிறரிடம் தண்ணீர் கூட வாங்கிக்குடிக்கமாட்டாராம். அதனால் அவருக்கு சக ஊழியர்களார் கிண்டலாகச் சூட்டப்பட்ட பெயர் தான் பச்சைத்தண்ணீர் பத்மநாபன். ஒருநாள் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழந்தவர் தனது உயிர் பிரியப்போகின்றது என்பதை அறிந்து தன் பிள்ளைகளை அழைத்தார்.

இறைவா..என் பிள்ளைகளை அனாதையாக விட்டுவிட்டுப் போகின்றேன், நீ தான் அவர்களைக் காக்க வேண்டும் என்று பிரார்த்தித்தவர் பிள்ளைகளிடம், நான் எப்படி வாழ்ந்தேன் என்று உங்களுக்குத் தெரியும். நீங்களும் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு நேர்மையாக வாழ்ந்து என் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்று நாதழுதழுக்கச் சொன்னார்.

இரண்டு மகன்களும் அமைதியுடன் கேட்டுக்கொண்டிருக்க கடைசி மகள் பிரியா மட்டும் கோபத்தில் வெடித்தாள். பிரியா கல்லூரி முதலாமாண்டு படித்து வருகிறார். அவள் விரும்பிய கல்லூரியில் கூட அவளைச் சேர்க்க வழியின்றி ஏதோ அரசு உதவி பெறும் கல்லூரியில் தான் பத்மநாபனால் சேர்க்க முடிந்தது. அதுவே அவளுக்குக் கோபம்.

அப்பா, உங்கள் பேங்க் அக்கவுன்டில் நயா பைசா கூட இல்லாமல் நீங்கள் எங்களை விட்டுப்போவது எங்கள் துரதிருஷ்டம். உங்களை என்னால் பின்பற்ற முடியாது. உங்கள் அறிவுரைகளையும் கேட்க முடியாது. ஊழல் பேர்வழிகள், ஊழல் பெருச்சாளிகள் என்று நீங்கள் கூறியவர்கள் எல்லோரும் அவர்கள் குழந்தைகளுக்கு பலதலைமுறைக்கான சொத்துசேர்த்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். ஆனால் நாம் இருக்கும் இந்த வீடுகூட வாடகை வீடுதான். சாரி, நீங்கள் நேர்மையாக இருந்து நாங்கள் பட்டதெல்லாம் போதும். உங்களை என்னால் பின்பற்றமுடியாது. நாங்கள் எங்கள் வழியைப் பார்த்துக்கொள்கிறோம். அவளை உற்றுநோக்கியபடி பரிதாபமாக அந்த ஜீவனின் உயிர் அடுத்த சில நிமிடங்களில் பிரிந்தது. காலங்கள் உருண்டன.

கல்லூரிப் படிப்பை எப்படியோ தட்டுத்தடுமாறி முடித்த பிரியாஒரு நேர்முகத்தேர்வில் கலந்துகொண்ட பொழுதுபுகழ்பெற்ற கட்டுமான நிறுவனத்திற்கு பணிக்கு மனுச் செய்து நேர்முகத்தேர்விற்குச் சென்றார். பிரியாவின் முறை வந்ததும் அழைக்கப்பட்டாள்.

அவளது விபரங்களைப் பார்த்த மெம்பர் ஒருவர் உன் அப்பா திரு பத்மநாபன் பொதுப்பணித்துறையிலிருந்து ஓய்வு பெற்றவரா என்று கேட்டார். ஆமாம் சார் என்றாள் பிரியா. உடனே அந்த நிர்வாக இயக்குனர் நிமிர்ந்து உட்கார்ந்து கேள்விகளை வீசினார். உங்க அப்பாவிற்குப் பச்சைத் தண்ணீர் பத்மநாபன் என்ற பெயர் உண்டா? ஆமாம் சார் என்றாள் பிரியா சற்றே நெளிந்தபடி. ஓ, நீங்கள் அவரின் பெண்ணா? இந்தக் காலத்திலே அவரைமாதிரி மனிதர்களைப் பார்க்கமுடியாதம்மா.. . .இந்த நிறுவனம் இன்று இந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றது என்றால் அதற்கு அவரும் ஒரு காரணம். கடலூரில் இருக்கும் பொழுது அரசாங்க குத்தகை ஒன்றுக்கு டென்டர் மனுச் செய்திருந்தேன். என்னை விட அதிகமாகக் குறிப்பிட்டிருந்த நிறைய பேர் எவ்வளவோ லஞ்சம் தருவதாகச் சொன்னபோதிலும் உங்கள் அப்பா அதெற்கெல்லாம் ஆசைப்படாது, அவர்களின் மிரட்டல்களுக்கெல்லாம் மசியாமல் அந்தக் குத்தகையை முறைப்படி எனக்கு ஒதுக்கினார். அன்றைக்கு மட்டும் அந்தக் குத்தகை அவர் எனக்கு ஒதுக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு நான் இல்லை, இந்தக் கம்பெனியும் இல்லை. ஏனென்றால் என் சொத்தையெல்லாம் அடமானம் வைத்துக் கம்பெனி ஆரம்பித்த நேரம் அது. அந்த ஒரு குத்தகை மூலமாகத் தான் எனக்கு நல்ல பெயர் கிடைத்து இந்தத் துறையில் ஒரு பெரிய நிலைக்குவருவதற்கான ஒரு ஆரம்பம் கிடைத்தது. ஆனால் அதற்குப்பிறகு உங்கள் அப்பா வேறு ஊருக்கு மாற்றலாகிச்

சென்றுவிட்டார் அவருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்த இதைவிடப் பெரிய வாய்ப்பு கிடைக்காது. நீ தேர்வாயிட்டம்மா, நாளைக்கே நீ வேலையில் சேர்ந்துவிடலாம் என்றார்.

அந்நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டதிகாரியாக பிரியாவிற்கு வேலை கிடைத்தது. அலுவலகம் வந்து செல்ல ஒரு இரு சக்கர வாகனம் வாங்கித் தந்தார்கள். வீட்டு வாடகை, பெட்ரோல் அலவன்ஸ் என்று பல பல சலுகைகள் என்று பிரியா கனவிலும் எதிர்பார்க்காத வேலை. இரண்டு ஆண்டுகள் சென்றன. பிரியா பணியிடத்தில் நல்ல பெயர் எடுத்தாள். இதற்கிடையே அவர்களின் சிங்கப்பூர் கிளை அலுவலத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் வேலையை இராஜினாமா செய்துவிட அங்குத் தலைமைப் பொறுப்பிற்குத் தகுதியான ஆள் தேவைப்பட்டது. இயக்குனர் குழமம் ஒன்றுகூடி விவாதித்துப் பிரியாவையே சிங்கப்பூர் பிரிவிற்குத் தலைமைப்பொறுப்பில் நியமிப்பது என முடிவானது. மாதம் 10 லட்சம் ரூபாய் சம்பளம், கம்பெனி சார்பாக ஒரு கார், அபார்ட்மென்ட் என அத்தனை வசதிகளும் அவளுக்குக் கிடைத்தன. கடுமையாக உழைத்துச் சிங்கப்பூர் நிறுவனத்தின் லாபத்தைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தாள் பிரியா. அவளை உள்ளூர் வணிகப் பத்திரிக்கை ஒன்று பேட்டி கண்டது. உங்கள் வெற்றிக்குக் காரணம் என்ன? என்ற கேள்வி கேட்டவுடனே பிரியா உடைந்து அழ ஆரம்பித்தாள்.. .. .. இது எல்லாம் எனது அப்பா எனக்குப் போட்ட பிச்சை. அவர் மறைந்தபிறகு தான் அவரது அருமையை நான் உணர்ந்தேன். பொருளாதார ரீதியாக அவர் ஏழையாக மறைந்தாலும் ஒழுக்கத்திலும், நேர்மையிலும், நாணயத்திலும் அவர் கோடீஸ்வரராக மறைந்தார். அதற்கு ஏன் இவ்வளவு நாள் கழித்து அழுகின்றீர்கள் என்றதற்கு பிரியா கூறலானாள். என் அப்பா இறக்கும் தருவாயில் அவரை நான் அவமதித்தேன். என் அப்பாவின் ஆன்மா என்னை மன்னிக்கும் என்று நம்புகின்றேன். இன்று நான் இருக்கும் நிலைக்கு வர நான் எதுவும் செய்யவில்லை. அவர் கஷ்டப்பட்டு, அல்லும் பகலும் பலவித தியாகங்களுக்கிடையே போட்ட பாதையில் நான் சுலபமாக நடந்துவந்துவிட்டேன். அப்போது உங்கள் தந்தை உங்களிடம் கேட்டுக்கொண்டபடி, அவர் அடிஒட்டிச் செல்வீர்களா? என் வீட்டு வரவேற்பறையில் அவர் படத்தைப் பெரிதாக மாட்டியிருக்கிறேன். அதைப் பார்க்கும் ஒவ்வொரு கணமும் அந்த ஆண்டவனுக்குப் பிறகு எல்லாமே என் அப்பாதான் என்று கண்களைத் துடைத்தபடி சொன்னாள் பிரியா?

நீங்கள் எப்படிப் பத்மநாபனைப் போலவா?

உண்மையான நல்ல பெயரைச் சம்பாதிப்பதென்பது மிகமிகக் கடினம். அதன் வெகுமதி உடனே வருவதில்லை. ஆனால் அது எவ்வளவு தாமதமாக வருகிறதோ அந்த அளவு நீடித்து நிலைத்து நிற்கும். நேர்மை, நாணயம், ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, தீயவற்றிற்கு அஞ்சுவது, கடவுளின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை இவையெல்லாம் தான் ஒரு மனிதனை முழுமையாக ஆக்குகின்றது. கோடீஸ்வரனாகவும் ஆக்குகின்றன.

நீங்கள் வாசித்து உண்மைக்கதை தான். நேர்மையாக இருந்தால் கண்ணீர் தான் பரிசு என்று மனம் கலங்கத் தேவையில்லை. உங்கள் நேர்மை தான் உங்கள் குடும்பத்தை, நாட்டை நிஜமாகக் காப்பாற்றும். மகிழ்ச்சியாக, நேர்மையாக சமுதாயப் பணியாற்றுவோம், லஞ்சம் இல்லாத சமுதாயத்தை நிச்சயமாக உருவாக்குவோம்.

**உண்மையும் பாரதியும்:**

இச் சமுதாயத்தில் உண்மை நிலைத்து நின்றால், உண்மை வென்றிட்டால் நியாயம், நீதி, நேர்மை தழைக்கும் அதனால் அனைத்து வளங்களும் நம்மை வந்தடையும் என்பதை பின்வரும் இப்பாடல் மூலம் கூறுகின்றார். வாருங்கள் சேர்ந்து பாடுவோம்.

மனதிலுறுதி வேண்டும்; வாக்கினிலே இனிமை வேண்டும்;

நினைவு நல்லது வேண்டும்; நெருங்கின பொருள் கைபடவேண்டும்;

கனவு மெய்ப்பட வேண்டும்; கைவசமாவது விரைவில் வேண்டும்;

தனமும் இன்பமும் வேண்டும்; தரணியிலே பெருமை வேண்டும்;

கண் திறந்திட வேண்டும்; காரியத்திலுறுதி வேண்டும்;

பெண் விடுதலை வேண்டும்; பெரிய கடவுள் காக்க வேண்டும்;

மண் பயனுற வேண்டும்; வானகமிங்கு தென்பட வேண்டும்;

**உண்மை நின்றிட வேண்டும்**; ஓம் ஓம் ஓம் ஓம்

**நேர்மையான மரம் வெட்டி:**

ஒரு சமயம் ராமன் என்ற மரம் வெட்டி காட்டிற்குச் சென்று, மரம் வெட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தான். ஒருநாள் காட்டிற்குச் சென்றபொழுது எப்பொழுதும் வெட்டும் இடத்தில் மரங்கள் குறைவாக இருந்ததால் தூரத்திலிருந்த நதியை நோக்கிச் சென்றான். அங்கு ஒரு பெரிய மரத்தைப் பார்த்து அதை வெட்ட ஆரம்பித்தான். வெட்டிக்கொண்டிருக்கும் பொழுது அவனது கோடாலி கைநழுவி ஆற்றினுள் விழுந்து விட்டது. அவனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. கரையிலிருந்து அழுதுகொண்டே ஆண்டவனிடம் பிரார்த்தித்தான். ஒரு தேவதை அவன்முன் தோன்றி அவன் ஏன் அழுகிறான் என்று தேவதை கேட்க ராமனும் தனது கோடாலி ஆற்றிற்குள் விழுந்ததைப் பற்றிக்கூறி அதனை எடுத்துத் தருமாறு வேண்டினான். தேவதையும் ஆற்றிற்குள் சென்று வெளியே வரும் பொழுது ஒரு தங்கக் கோடாலியைக் கொண்டு வந்து காண்பித்து அதுதான் அவனுடையதா என்று கேட்க ராமன் எந்தத் தயக்கமுமில்லாமல் அந்தத் தங்கக் கோடாலி தன்னுடையதில்லை எனக்கூறினான். தேவதையோ வெள்ளிக்கோடாலியைக் கொண்டுவந்து அவனுடையதா எனக்கேட்க அதுவும் தன்னுடையதில்லை எனக்கூறிவிட்டான். தேவதை ஒரு இரும்புக் கோடாலியைக் கொண்டுவந்து காண்பிக்க அதுதான் தன்னுடையது என்று சந்தோஷமாகக் கூறினான். அவனது நேர்மையைக் கண்டு சந்தோஷப்பட்டு அந்தத் தேவதை மூன்று கோடாலிகளையுமே அவனுக்கே கொடுத்துச் சென்று விட்டது. அவனது நேர்மைக்குக் கிடைத்த பரிசு அது. தங்கக் கோடாலியை விற்று பெரும் பணக்காரனாகி சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினான்.

**ராஜாவும் பூச்செடியும்:**

## புதுமைப் பயணம்

முன்னொருகாலத்தில் ஒரு ராஜா இருந்தார். இயற்கையின் காதலர் அவர். அவரது அரண்மனைத் தோட்டத்தில் விதம் விதமான பூச்செடிகள் இருந்தன. ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணி நேரம் அந்தத் தோட்டத்தில் நேரத்தைக்கழிப்பார். அவருக்குக் குழந்தைகளேதும் இல்லை. நாளுக்கு நாள் வயதும் ஏறிக்கொண்டிருந்தது. ஒரு நாள் தனது நாட்டுக் குடிமக்களைத் தனது அரண்மனைக்கு அழைத்தார். அரசி என்ற பெயருடைய சூட்டிகையான பெண் ஒருத்தி அந்த நாட்டில் இருந்தாள். மகாராஜா கூப்பிடுகிறார் என்றவுடன் அவளும் கிளம்பிச் சென்றாள்.

மகாராஜா வந்த ஒவ்வொரு குடிமகனிடமும் தன்னிடமிருந்த அழகான பெட்டியிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அரசி முறையும் வந்தது. அவளிடமும் மகாராஜா பெட்டியிலிருந்து ஒரு விதையை எடுத்துக்கொடுத்தார். பின் அனைவரிடமும் அவர் இன்னும் ஒரு மாதத்தில் அந்த விதையை செடியாக்கிக் கொண்டுவரவேண்டும் என்றும் எந்தச் செடியில் மிக அழகான பூ பூத்திருக்கின்றதோ அந்தச் செடிக்குச் சொந்தக்காரர் தான் தனது வாரிசு என்றும் தனக்குப் பின் இந்த நாட்டை ஆளப்போகிறவர் என்றும் கூறினார்.

திரும்பி வந்த அரசியோ அந்த விதையை அழகான மண்ஜாடியில் வண்டல் மண் நிரப்பி அதில் ஊன்றி தண்ணீர் விட்டுப் பராமரித்து வந்தாள். ஒரு வாரம் சென்றது, விதை முளை விடவில்லை. பின் விதையை வேறு ஒரு மண்தொட்டிக்கு மாற்றினார். மகாராசா கொடுத்த கெடுவும் முடிந்தது. செடி வளராத தன் தொட்டியை எடுத்துச் சென்றாள். போகாமல் இருந்து விடலாமா என்ற எண்ணம் வந்தது. ஆனால் அது சரியில்லை என்று அரண்மனைக்குச் சென்றாள். அங்கு பார்த்தால் வந்த ஒவ்வொருவரும் வளர்ந்த செடியும் மிக மிக அழகான பூக்களுடன் நின்றுகொண்டிருந்தனர். இவளுக்கோ ஒரே வருத்தம். மகாராசா இவளிடம் என்ன ஆயிற்று என வினவினார். இவளும் எந்த அளவிற்கு நேர்மையாக அந்த விதை முளைக்க முயற்சி செய்தாள் எனக் கூறினாள். மகாராசாவோ மற்றவர்களை விடுத்து அரசியையே தனது வாரிசாக அறிவித்தார். இவளுக்கோ ஆச்சரியம். மிகச் சிறந்த பூக்களுக்குச் சொந்தக்காரர்களுக்குக் கூட வாய்ப்புக்கிட்டவில்லை. மகாராசாவிடமே காரணத்தை வினவினாள். மகாராசாவும், நான் கொடுத்தது வறுக்கப் பட்ட விதைகள். அவை முளைப்பதற்கான சாத்தியக்கூறே இல்லை. ஆனாலும் இத்தனை பேரும் பூச்செடிகளோடு வந்ததற்குக் காரணம் என்ன? அவர்களை நேர்மையானவர்கள் என்று எப்படி நம்புவது?. ஆக அரசியின் நேர்மைக்கு ஒரு இராசாங்கமே பரிசாகக் கிடைத்துவிட்டதல்லவா?

**நிறைவுரை:**

நேர்மை, பண்புநலன்களில் முக்கியமான ஒன்று. நேர்மை இருந்தால் தான் நம்பகத்தன்மை வரும் . நட்புறவு பெருகும், அணிகள் பல உருவாகும். நேர்மையுடன் நடப்பவன் தான் சுயநலம் கருதாது பொதுநலம் பேணுவான். அதனால் சமுதாயமும் மேம்படும். நேர்மை என்ற ஒரு குணாதிசயம் இந்தியா முழுமைக்கும் அன்னா ஹஸாரேயைக் கொண்டுசேர்த்தது. நேர்மையாகப் பலர் உழைத்ததால் ராலேகான் சிந்தி இன்று ஒருமுன்மாதிரிக் கிராமமாக உள்ளது. எண்ணத்தில் நேர்மை, சொல்லில் நேர்மை, கொண்ட செயல்களில் நேர்மை உங்களை ஒரு நல்ல மனிதனாக மட்டுமல்ல சிறந்த தலைவனாகவும் ஆக்கும்.